**செய்தி வெளியீடு எண்: 353** **நாள்: 19.05.2008**

**ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின் கீழ்**
**ரூபாய் 210 கோடிக்கு பரிந்துரை**
**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்**
**திரு. மு.க. ஸ்டாலின் தகவல்**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின் மாநில அளவிலான ஏழாவது ஒப்பளிப்புக் கூட்டம் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் இன்று (19.05.2008) காலை நடைபெற்றது.

இந்த ஒப்பளிப்புக் குழுவில் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களுக்கான தற்போதைய நிலை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

சென்னை பெருநகர எல்லைக்குட்பட்ட திருவொற்றியூர் நகராட்சியில் ரூ.84 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டம், குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தற்போதுள்ள 2.47 இலட்சம் மக்கள் நாளொன்றுக்கு 135 லிட்டர் வீதம் குடிநீர் பெறுவார்கள். இத்திட்டம் 30 ஆண்டுகள் தொலைநோக்குடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள புராதன சின்னங்களை ரூ.126 கோடிகளில் மேம்படுத்தி சுற்றுலா பயணிகளை ஈர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள அங்காடிகளை மாட்டுத்தாவணி அருகே மாற்றம் செய்யவும், இவ்விடத்தில் சுற்றுலா பயணிகள் வசதிக்காக வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் நிதித் துறை செயலாளர் திரு.ஞானதேசிகன்,இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசுச் செயலர் திரு.கே. தீனபந்து, இ.ஆ.ப., டுபிட்கோ தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், திரு. எம்.ஏ.கௌரிசங்கர்இ.ஆ.ப., திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை முதன்மைச் செயலர் திரு. நாகராஜன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைத் துறை செயலர் திரு.அலாவுதீன், இ.ஆ.ப., வீட்டு வசதித் துறை செயலாளர், திரு செல்லமுத்து, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி இ.ஆ.ப., நிதித்துறை சிறப்புச் செயலர் திரு.பிரவீன்குமார், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. சிவதாஸ் மீனா, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. சுவரன்சிங், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.டி.கே.இராமச்சந்திரன், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வடிகால் வாரிய செயல் இயக்குநர் திரு.எஸ்.தங்கசுவாமி, இ.ஆ.ப.,கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் திரு.வி.கே.சண்முகம், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை .**